


கட்டான்கொளததுார் ஒனறியததில உள்ள தைலாபுரம் கிராமததில வீகோ தொனடு நிறுவனம் மற்றும் கூடுவாஞ்சேரி ரானே என்,எஸ்.கே. தொழிற்சாலையும் இணைந்து பொது மருத்துவ முகாமை நடத்தினர். அருகில் பொதுமேலாளர் எ.பாஸ்கர்ராஜ்,, ர.கோவிந்தாஸ், ர.அருணாச்சலம், மற்றும் வீ கேர் தொண்டு நிறுவன இயக்குநர் அந்தோணி ஆகியோர் உள்ளனர்.

# ரானே தொழிற்சாலை-வீ கேர் தொண்டு நிறுவன பொதுமருத்துவ முகாம்

காஞ்சிபுரம், ஆக.31-

வீ-கேர் தொண்டு நிறுவனம் மற்றும் கூடுவாஞ்சேரி ரானே என்.எஸ்.கே. தொழிற்சாலையும் இணைந்து காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள தைலாவரம் கிராமத்தில் பொதுமருத்துவ முகாமை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், தைலாவரம் கிராமத்தில் வசிக்கும் 155 பெண்களும் 29 ஆண்களும் 69 சிறுவர்களும் பொதுமருத்துவ முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். இம்முகாமில் பெண்களுக்கான சிறப்பு மருத்துவர் ரூபா கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார். மேலும் இம்முகாமில் பால்வினை நோய்க்கான சிறப்பு சிகிச்சையும் அளித்தனர். மேலும் நடமாடும் எச்.ஐ.வி. பரிசோதனை வாகனமும் இம்முகாமில் கலந்து கொண்டதால் இக்கிராமத்தில் உள்ள 50 நபர்கள் தாமாக முன் வந்து எச்.ஐ.வி. பரிசோதனை செய்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், ரானே என்.எஸ்.கே. தொழிற்சாலையின் பொதுமேலாளர் ஏ.பாஸ்கர்ராஜ், பொது மேலாளர் ர.கோவிந்தாஸ், மனிதவளம் உதவி அதிகாரி ர.அருணாசலம் மற்றும் வீ-கேர் தொண்டு நிறுவன இயக்குநர் அந்தோணி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில், வீ-கேர் தொண்டு நிறுவன அந்தோணி பேசியபோது, ஆரோக்கியம் மற்றும் பரிசோதனை அவசியம் குறித்தும்அதனால் கிடைக்கக் கூடிய பலன்கள் குறித்தும் குழந்தைகளுக்கும் சிறுவயதில் இருந்து நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை வலியுறுத்தினால் வருங்காலம் ஆரோக்கியமாக முடியும் என்று பேசினார்.

ரானே நிறுவனத்தின் பொது மேலாளர் கோவிந்தாஸ் பேசும்போது, எங்கள் நிறுவனத்தில் உற்பத்தி மட்டுமே முக்கிய நோக்கமல்ல அருகில் உள்ள கிராம மக்களுக்கு பல்வேறு நலப் பணிகளை குறிப்பாக இலவச மருத்துவ முகாம், மரக் கன்றுகள் குறித்தல், கல்வி உதவிகள் போன்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி செய்து வருகிறோம் என குறிப்பிட்டார்.

தைலாவரம் கவுன்சிலர் பெருமாள் பேசும்போது, மருத்துவ முகாமில் கலந்து கொள்வதன் மூலம் இக்கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் நோயற்ற வளமான வாய்வை பெற இம்முகாம் உதவும் என குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கிராமத்தில் உள்ள குழந்தைகள், இளைஞர்கள், மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ரானே என்.எஸ்.கே. தொழிற்சாலையின் தொழி லாளர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்கள்.